# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017

| தரம் : 09 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம் : 2.30 மணி |
|---|---|---|
| | பெயர் / சுட்டெண் ............................................... | |

## பகுதி I

☞ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. 'கூற்றினும் பாவலர் கொடியவராவரே". இங்கு பாவலர் என்பதன் கருத்து
1. புலவர் 2. புரவலர் 3. இயமன் 4. கொடுமையாளர்

02. "யாதும் ஊரே யாவரும் கேளிர்". இங்கு கேளிர் என்பதன் கருத்து
1. பகைவர் 2. சுற்றத்தார் 3. நண்பர் 4. எதிரிகள்

03. "பெண்ணே! பிணக்கம் இல்லாமல் விடை கொடடி--" இங்கு பிணக்கம் என்பதன் எதிர்ப்பதம்
1. மாறுபாடு 2. பிரச்சினை 3. இணக்கம் 4. சுணக்கம்

04. "கன்னி மனக் கனவு அங்கோர் காதலர் பால் தோயும்" இங்கு கனவு என்பதன் எதிர்ப்பதம்
1. சொப்பனம் 2. ஆசை 3. நினைவு 4. நனவு

05. "கோலமா மடவார் சூழ்ந்தனர் நடப்பக் கொழுநனை எதிர் கொள்வான் வந்தாள்" இங்கு கொழுநன் என்பதன் எதிர்ப்பாற் சொல்
1. கணவன் 2. தபுதாரன் 3. மனைவி 4. கொழுந்தி

06. காகம் கரையும் என்பது போல தேனீ
1. இரையும் 2. ரீங்காரம் செய்யும் 3. அலறும் 4. சீறும்

07. பனையின் இளம் பிஞ்சு நுங்கு என்பது போல பலாவின் இளம் பிஞ்சு
1. வடு 2. கச்சல் 3. குரும்பை 4. மூசு

08. வெளிநாட்டில் மாமாவுக்கு சிற்றிசன்சிப் (citizenship) கிடைத்தது. சிற்றிசன்சிப் என்பதன் கலைச்சொல் வடிவம்
1. கேள்வி 2. பிரஜாவுரிமை 3. மதிப்பீடு 4. குறியாக்கம்

09. நிறுத்தக் குறிகளில் விளக்கிசைக்குறி எனப்படுவது
1. ; 2. , 3. : 4. " "

10. ஐம்பதாவது ஆண்டின் நிறைவில் கொண்டாடப்படும் விழா
1. பொன்விழா 2. பவளவிழா
3. வைரவிழா 4. அமுதவிழா

11. கொடு, வண்டு, மது, அன்பு என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
1. அரி 2. அளி 3. பதி 4. கவி

12. ஒரு நூலை அச்சிட்டு வெளியிடுவோர் அந்நூலைப் பற்றிக் கூறும் உரை
1. அணிந்துரை 2. நூன்முகம் 3. பதிப்புரை 4. முகவுரை

13. "கரையேறுதல்" என்ற மரபுத்தொடர் குறிப்பது
1. உய்வடைதல் 2. திருப்தியடைதல்
3. வெளிவருதல் 4. ஆரம்பமாதல்



kalvi.lk

14. விடாமுயற்சி வெற்றி தரும் என்ற கருத்தைத் தரும் பழமொழி
1. ஆறின கஞ்சி பழங்கஞ்சி
2. எறும்பூரக் கற்குழியும்
3. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
4. இட்டுக் கெட்டார் எங்குமில்லை

15. பின்வருவனவற்றுள் இணைமொழியாக அமைவது
1. கன்னங்கரிய
2. விண்ணும் மண்ணும்
3. பெரிய பெரிய
4. வெளி வெளி

16. பின்வருவனவற்றுள் உடனிலை மெய்ம்மயக்கமாக அமைந்த சொல்
1. கள்வர் 2. பந்து 3. முயற்சி 4. தெவ்வர்

17. இடையின உயிர்மெய்யெழுத்துக்களின் எண்ணிக்கை
1. 72 2. 30 3. 42 4. 90

18. பேசுவோனுக்கு அண்மையிலுள்ள பொருளைச் சுட்டுவதற்கு பயன்படும் சுட்டெழுத்து
1. அ 2. இ 3. உ 4. எ

19. பின்வருவனவற்றுள் வன்றொடர்க் குற்றியலுகரமாக அமைவது
1. வண்டு 2. வரகு 3. பாக்கு 4. காடு

20. கடலலை என்பது எவ்வகைப் புணர்ச்சியாகும்.
1. இயல்புப்புணர்ச்சி
2. தோன்றல் விகாரப்புணர்ச்சி
3. திரிதல் விகாரப் புணர்ச்சி
4. கெடுதல் விகாரப் புணர்ச்சி

21. "நாற்குணமும் நாற்படையா வைம்புலனும் நல்லமைச்சா--------" இங்கு இடம் பெறும் அணி
1. உவமை
2. உருவகம்
3. தற்குறிப்பேற்றம்
4. உயர்வு நவிற்சி

22. காளையில் வலியவன். இங்கு "இல்" உருபு உணர்த்தும் பொருள்
1. நீங்கல்
2. எல்லை
3. ஒப்பு
4. ஏது

23. நாற்காலி என்பது
1. காரண இடுகுறிப் பெயர்
2. காரணப்பெயர்
3. இடுகுறிப்பெயர்
4. காரண சிறப்புப் பெயர்

24. பாடிய மாணவி பரிசைப் பெற்றாள். இங்கு பாடிய என்பது
1. பெயரெச்சம்
2. வினையெச்சம்
3. வினைமுற்று
4. எதிர்மறைப் பெயரெச்சம்

25. நாங்கள் படித்தோம். இங்கு நாங்கள் என்பது
1. தன்மை ஒருமை
2. தன்மைப் பன்மை
3. முன்னிலைப் பன்மை
4. படர்க்கைப் பன்மை

26. "உண்ட பின் உலாவி உறங்கு" இங்கு இடம் பெற்ற எழுவாய்
1. நீங்கள்
2. நாங்கள்
3. அவர்கள்
4. நீ

27. லியோனியின் பட்டிமன்ற நிகழ்வைப் பார்த்து மகிழ மக்கள் கூட்டம் ...................................
1. சென்றது
2. சென்றன
3. செல்லுகின்றன
4. சென்றனர்

28. இலஞ்ச ஆணைக்குழு .................................. வாங்குபவர்களைக் கைது செய்யுமாறு உத்தரவிட்டுள்ளது.
1. வெகுமதி
2. கைப்பொருள்
3. அன்பளிப்பு
4. கையூட்டு



kalvi.lk

29. எழுத்துப் பிழைகளற்ற சொற்றொடரினைத் தெரிவு செய்க.
   1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
   2. பல்கலைக்களக மானியங்கள் ஆணைக்குழு
   3. பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு
   4. பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழு

30. பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி ஒரு பந்தியாக்குவதற்கான வைப்பு முறையைத் தெரிவு செய்க.
   அ. மலைகளில் ஏறுகிறான்; குழிகளில் குதிக்கிறான்.
   ஆ. ஊசியைத் தொடரும் நூல் போலக் குழந்தை முனிவன் நடக்கிறான்.
   இ. என்றாலும் அந்த முனிவன் அடிகளையன்றி அயலில் வேறொன்றையும் அந்த இளம் முனிவன் அறியான்.
   ஈ. பெரிய முனிக்குப் பிறகே சிறிய முனி நடக்கிறான்.
   உ. நதிகளில் நீந்துகிறான் அடவிகளில் நுழைகிறான்
   1. ஆ,ஈ,அ,உ,இ 2. ஆ,ஈ,அ,உ,இ
   3. ஈ,அ,உ,ஆ,இ 4. ஈ,ஆ,அ,உ,இ

**(30 x 1 = 30 புள்ளிகள்)**

## பகுதி - II

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக

**(01) வகுப்பறையில் மேற்கொண்ட பேச்சுக் கணிப்பீட்டை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**
   அ. நீர் பேச எடுத்துக் கொண்ட விடயத் தலைப்பு யாது?
   ஆ. ஆசிரியரால் உமக்கு வழங்கப்பட்ட ஆலோசனைகள் இரண்டு தருக.
   இ. பேச்சுக்கான தகவல்களைப் பெற்றுக் கொண்ட வழிமுறைகள் இரண்டு தருக.
   ஈ. இக் கணிப்பீட்டுக்கு ஆசிரியரால் வழங்கப்பட்ட நியதிகள் மூன்று தருக.
   உ. இக் கணிப்பீட்டினால் நீர் பெற்றுக் கொண்ட நன்மைகள் எவை?

(10 புள்ளிகள்)

**(02) பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**
   அ. வாசிப்பின் முக்கியத்துவம்.
   ஆ. விஞ்ஞானமும் மனித வாழ்வும்.
   இ. நவீன தகவல் தொழிநுட்பத்தின் வளர்ச்சி
   ஈ. கல்வியின் சிறப்பு.

(20 புள்ளிகள்)

**(03) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 75 சொற்களுக்கு குறையாது எழுதுக.**
   அ. நீரின் முக்கியத்துவம் என்னும் தலைப்பில் ஒரு துண்டுப்பிரசுரம் எழுதுக.
   ஆ. உமது பிரதேசத்தில் உள்ள வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. எனவே இதனால் ஏற்படும் பிரச்சினையைச் சுட்டிக் காட்டி பிரதேசசபைத் தவிசாளருக்கு கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

**(04) 1. பின்வரும் கூற்றுக்கள் யாரால் யாருக்குக் கூறப்பட்டன.**
   அ. "பந்தனை யகன்ற மேலோய் ----------------"
   ஆ. "அன்னப் பெடையே தொழுதேன் அன்னை கொடியள் கண்டாய் --------"
   இ. "அப்பனைக் கொன்றவனோ டெப்படிநீ கூடினாயோ.............."

(3 × 2 = 6 புள்ளிகள்)



kalvi.lk

**2. பின்வரும் பாடலின் பொருளை உமது மொழி நடையில் எழுதுக.**

அ. வழி நடந் திளைத்த வேயிம் மலரடி யிரண்டு மென்று
கழிமகிழ் சிறப்ப மெல்ல வருடினான். கமலக்கண்ணன்
பழியில்பல் லுபசா ரங்கள் பண்ணவுந் தெரியானாகி
ஒழிவறு தவக்கு சேல னொன்றும்பேசா திருந்தான்.

ஆ. வெள்ளத் தனையமலர் நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு.

(4 + 2 = 6 புள்ளிகள்)

**(05) 1. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**

1. தொழிலாளர் செய்த சேவைகள் இரண்டு தருக.
2. "ஈழத்து இலக்கிய இரட்டையர்கள்" என அழைக்கப்படுபவர்கள் யாவர்?
3. "அப்பனே யெனக்கு அமுதனே..." என்ற பாடல் இடம் பெற்ற நூல் எது? பாடியவர் யார்?
4. அசோகச் சக்கரவர்த்தியின் தந்தை, பேரன் யாவர்?
5. "மரம் போல்வர்" என்று குறிப்பிடப்படுபவர் யாவர்?

(2 × 5 = 10 புள்ளிகள்)

**2. பின்வரும் தொடர்களின் பொருள் விளங்க வாக்கியம் அமைக்குக.**

1. பென்னம்பெரிய
2. வண்ண வண்ண
3. கீரியும் பாம்பும் போல
4. கையும் மெய்யுமாய்

(4 புள்ளிகள்)

**3. வழு நீக்கி எழுதுக.**

மாடமாலிகைகளையும், ஆடை அனிகழன்களையும் தட்டு முட்டுக்களையும் திண் பன்டங்களையும் வேடிக்கை விழையாட்டுக்களையுமே மேளான செள்வமாகக் கருதுகின்றனர்.

(4 புள்ளிகள்)



kalvi.lk




Education கல்வி அධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457